NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 30 May 2017

# தனியார் அடுக்குமாடி வீடு மறுவிற்பனை விலை இறக்கம்

கட்டி முடிக்கப்பட்ட தனியார் அடுக்குமாடி வீடுகள், கூட்டுரிமை வீடுகளின் மறுவிற்பனை விலை ஏப்ரலில் 0.6% குறைந்தது. மார்ச் மாதம் அந்த விலை 0.8% அதிகரித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சிங்கப்பூர் குடியிருப்புச் சொத்து விலை அட்டவணையின் மூலம் இது தெரியவருகிறது. இந்த ஆண்டு இன்றைய தேதியில் பார்க்கையில் விலை 0.3% குறைந்திருக்கிறது.

ஓராண்டுக்கு முன் நிலவிய விலையுடன் ஒப்பிடுகையில் இந்தக் குறைவு 2.4% ஆக இருக்கிறது. மத்திய பகுதியில் அல்லாமல் இதர பகுதியில் உள்ள வீடுகளின் விலைகள் தான் மாத அடிப்படையில் ஆக அதிகமாக 0.7% குறைந்தன. அதேவேளையில் சிறிய வீடுகளின் விலை ஏப்ரலில் 0.7% அதிகரித்தது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.